DINAMANI 08 JUL 2007

கோபி பகுதியில் 30 லட்சம் மரக்கன்று நடத் திட்டம்

ஈஷா யோக மைய ஜகி வாசுதேவ் தகவல்

கோவை, ஜூலை 8: கோபி பகுதியில் 30 லட்சம் மரக்கன்றுகள் ஈஷா மூலம் நடப்படும் என ஈஷா யோக மைய நிறுவனர் சத்குரு ஜகி வாசுதேவ் கூறினார்.

தமிழகம் பாலைவனமாவதைத் தடுக்க 11.04 கோடி மரங்கள் நட்டால்தான் முடியும். அனைத்து விவசாயிகளும் தங்கள் பகுதியில் 10 மரங்களுக்காக இடம் ஒதுக்க வேண்டும். இது சாத்தியம், இதற்கு அனைவரின் ஒத்துழைப்பு தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோவை ஈஷா யோக மையத்தில் 'விவசாயி நமது வளர்ப்பு தாய்' என்ற கருத்தரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சிபிஐ முன்னாள் இயக்குநர் டிஆர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். ஈஷா யோக மைய நிறுவனர் சத்குரு ஜகி வாசுதேவ் தலைமை வகித்தார். கருத்தரங்கில் அவர்கள் கூறியது:

2025-ல் தமிழ்நாடு பாலைவனம் ஆகிவிடும் என்று கூறுகிறார்கள். ஆனால் மழை வெள்ளம் உருவாகிறதே? என்ற கேள்வி வருகிறது. மண் அரிப்பு தடுக்கப்பட வேண்டும். மரங்கள் நடப்பட வேண்டும். விவசாய நிலத்தில் மரம் நட்டால் விவசாயம் பாதிக்கும் என்ற வாதம் மாற்றப்பட வேண்டும். பணம் தரக் கூடிய பழ மரங்கள் வளர்க்க வேண்டும். குறைந்தபட்சம் 10 மரங்கள் நட்டு நாட்டின் பசுமை குடை பரவ வேண்டும். மண்வளம் அழிந்தால் விவசாயம் அழியும்.

மரபுசார்ந்த விவசாய அறிவு அனைவருக்கும் செல்ல வேண்டும். இதனை பலரும் பேசியே வருகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்த முடியாத சூழ்நிலையில் தேவையான தொழில்நுட்ப அறிவை கோபி வட்டத்தில் ஈஷா வழங்கும். அதனை மாதிரி தாலுகாவாக போற்றும் முயற்சியில் ஈஷா அர்ப்பணிக்கும்.

மூலதனத்தைவிட மகசூல் குறையும்போது அரசாங்கம் உதவிட முன்வர வேண்டும் என்பது ஒரு வகையான தீர்வு என்பது மறுப்பதற்கில்லை. இப்போது நாம் காண வேண்டியது நஷ்டத்தில் இருக்கும் விவசாயத்தை லாப நோக்கில் இயக்குவது எப்படி என்று யோசிக்க வேண்டும்.

இயற்கை விவசாயம் செலவு அதிகம். சாணம் கிடைப்பதில்லை. மாடுகள் இல்லை. மண் புழு வளர்க்க செலவு அதிகம் போன்ற கேள்விகள் எழுகின்றன. நமது விவசாயத்தை விஞ்ஞானப் பூர்வமாக மாற்றுவது என்பது வெறும் எந்திரம் சார்ந்தது அல்ல. அது புத்திசாலித்தனம் சார்ந்தது என்றும் அவர்கள் கூறினர்.

ஈஷா ஆக்ரோ சர்வீசஸ்: ஈஷா ஆக்ரோ சர்வீசஸ் என்ற பெயரில் சேவை மையம் கோபியில் அமைய உள்ளதாக ஈஷாவின் திட்ட இயக்குநர் சேகர் கூறினார். இந்த சேவை மையத்தில் நம்மாழ்வார் உள்ளிட்ட பல்வேறு அறிஞர்கள், ஆசிரியர்கள் இருப்பர். கோபியில் 2,000 ஏக்கரில் மாதிரி பண்ணை உருவாக உள்ளது. இதில் விவசாயிகள் முழு சேவையைப் பெற சிறிதளவே கட்டணம் செலுத்த வேண்டும்.

இது தவிர, 150 கிராமங்களில் மாதிரி சாகுபடி பண்ணைகள் உருவாக்கப்படும். விவசாயிகளின் மேம்பாட்டிற்கான பயிற்சிகள் அளிக்கப்படும். சொட்டுநீர் பாசனம் அமைக்க தேவையான கடன் வசதி செய்துதரப்படும். எப்எம் ரேடியோ அலைவரிசையும் முயற்சி மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.



கோவை ஈஷா யோகா மையம் சார்பில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றுகிறார் சத்குரு ஜகி வாசுதேவ். உடன் சிபிஐ முன்னாள் இயக்குநர் டிஆர் கார்த்திகேயன்.